# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப.(ஓ) ,**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 219/ந/2025, நாள் 11.03.2026

| | | |
|---|---|---|
| K. மல்லிகா,<br>வழுதரெட்டி, விழுப்புரம். | – | முறையீட்டு மனுதாரர் |
| நகராட்சி ஆணையர்,<br>விழுப்புரம் நகராட்சி,<br>விழுப்புரம் மாவட்டம். | – | எதிர்மனுதாரர் |

விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம், வழுதரெட்டி, சண்முகா கார்டன் ஃபேஸ் –2, பிளாட் எண்.97 என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி K. மல்லிகா என்பவரது 21.06.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 23.06.2025 அன்று பெறப்பட்டு, 219/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம், வழுதரெட்டி, சண்முகா கார்டன் ஃபேஸ்–2, பிளாட் எண்.97 என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி K. மல்லிகா என்பவர் 21.06.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

"1. மேற்கண்ட முகவரியில் வசித்து வரும் மூத்த குடிமகளான நான் எங்களது குடியிருப்பு பகுதிகளுக்கு புதிய தெருமின்விளக்கு அமைப்பதற்காக கடந்த 01.11.2023 தேதியன்று விழுப்புரம் நகராட்சி ஆணையர் அவர்களுக்கு பதிவு அஞ்சல் மூலம் மனு செய்திருந்தேன்.

2. 01.11.2023 நாளிட்ட எனது கோரிக்கை மனு மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால், 06.11.2024 நாளிட்ட புகார் மனுவினை தமிழக முதல்வரின் தனிப்பிரிவு மற்றும் முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்களிடம் அளித்திருந்தேன்.

3. அதன்பிறகு முதலமைச்சரின் தனிப்பிரிவு, தலைமைச் செயலகம், சென்னை–9 அவர்களின் கடித எண்.Y/242836/பிரிவு–3/2024–1, நாள் 18.12.2024 மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி–30) தலைமைச் செயலகம், சென்னை–9 அவர்களின் கடித எண்கள் 5281/ந.நி.3(1)/2024–1, நாள்31.12.2024, 4596/ந.நி–2/2024–1, நாள் 11.11.2024 மற்றும் 4666/ந.நி.3/2024–1, நாள் 15.11.2024 காணும் கடிதங்களின் மூலமாக 01.11.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள எங்களது கோரிக்கை மனுவிற்கு தீர்வு காணும்படி விழுப்புரம் நகராட்சி ஆணையர் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

4. ஆனால் விழுப்புரம் நகராட்சி ஆணையர் அவர்கள் மேற்காணும் கடிதங்களை பொருட்படுத்தாமல் இதுநாள் வரை (2 வருடங்கள் கடந்தும்) எங்கள் பகுதிக்கு தெருமின்விளக்கு அமைத்து தரவில்லை. மேலும், அவர் அரசு பணியை முறையாக செய்யாமலும், வேண்டுமென்றே நடவடிக்கை எடுக்காமல் காலம் தாழ்த்தி வருகின்றார்.

5. எனவே, கனம் அய்யா அவர்கள் எதிர்மனுதாரர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கவும், 01.11.2023–ல் கண்டுள்ள கோரிக்கை மனுவிற்கு தீர்வு காணும்படி பணிவுடன் வேண்டுகிறேன்.

6. மேற்படி எதிர்மனுதாரர் அவர்களின் இந்த செயல்பாட்டினால் மனுதாரர் ஆகிய எனக்கு மிகுந்த மன உளைச்சலும், காலவிரையமும், பணவிரையமும் ஏற்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

2) மனுதாரர் விழுப்புரம் நகராட்சி ஆணையருக்கு முகவரியிடப்பட்ட 01.11.2023 நாளிட்ட கடிதத்தில் கீழ்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்றித் தர கேட்டுக்கொண்டுள்ளார்.

"1. நாங்கள் அனைவரும் தங்களின் நகராட்சிக்கு உட்பட்ட வழுதரெட்டியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சரவணா கார்டன், சண்முகா கார்டன், (Phase II)–ல் வசித்து வருகின்றோம். அய்யா எங்கள் பகுதியில் தெருவிளக்குகளின் அவசர தேவை உள்ளதனை சுட்டி காட்ட விழைகின்றோம்.

2. சில முக்கிய வீதிகளில் தெருவிளக்குகள் இல்லாததால் இரவில் அத்தெருக்கள் மற்றும் பகுதிகள் இருட்டாக உள்ளது. இதை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு, குண்டர்கள், கொள்ளையர்கள் மற்றும் பிற தீய செயல்களில் ஈடுபடுகின்றனர்.

3. குறிப்பாக பெண்கள் குழந்தைகள் மற்றும் முதியவர்கள் அவசர தேவைக்காக இரவு நேரங்களில் இதுபோன்ற இருளான தெருக்களில் செல்ல அஞ்சுகின்றனர். இது அவர்களின் அன்றாட வாழ்வினை பாதிக்கின்றது.

4. புதிய தெருவிளக்குகள் அமைக்க உள்ளூர் அலுவலர்களிடம் கோரிக்கை வைத்தோம். ஆனால் இதுவரை எந்த அலுவலரும் நடவடிக்கை எடுக்கவில்லை. பின்வரும் தெருக்களில் அவசர அடிப்படையில் தெருவிளக்குகள் தேவை.

5. அதுமட்டுமல்லாமல் இந்த எல்லீஸ் சத்திரம் சாலை வழியாக (ES College) பாளையம், திருப்பச்சாவடி மேடு, கொண்டங்கி, கோவிந்தபுரம், கப்பூர், மரகதபுரம், ஒருகோடி, ஏனாதிமங்கலம் மேலும் பல ஊர்களுக்குச் செல்லும் மிக முக்கியமான சாலை என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

    1. எல்லீஸ் சத்திரம் சாலை (வழுதரெட்டி பேருந்து நிறுத்தங்களில் இருந்து பாளையம் செல்லும் சாலை வரை).
    2. பாளையம் செல்லும் சாலை.
    3. சரவணா கார்டன் சாலை, சண்முகா கார்டன் சாலை (Phase 1, 2).

6. எனவே மேற்கூறிய தெருக்களில் தெரு விளக்கு அமைக்க சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தயவு செய்து அறிவுறுத்துமாறு நாங்கள் உங்களை வேண்டிக் கொள்கிறோம். இது எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்."

3) முறையீட்டு மனுதாரரின் புகார் மனுமீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 25.06.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் விழுப்புரம் நகராட்சி ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆனால் விழுப்புரம் நகராட்சி ஆணையரிடமிருந்து அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

4) எனினும், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரான விழுப்புரம் நகராட்சி ஆணையர் ஆகியோரை 28.01.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு 20.01.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) புகார் மனுமீதான அறிக்கையினை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு விழுப்புரம் நகராட்சி ஆணையர் சமர்ப்பிக்காததால், 28.01.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு முறையீட்டு மனுதாரரின் புகார் மனுமீதான விரிவான அறிக்கையுடன் ஆஜராக இம்முறைமன்ற நடுவத்தின் 20.01.2026 நாளிட்ட அழைப்பாணையில் விழுப்புரம் நகராட்சி ஆணையர் கேட்டுக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, 28.01.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் சமர்ப்பிக்கப்பட்ட விழுப்புரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை ந.க.எண்.523/2026/இ2, நாள் 27.01.2026–ல் முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்கண்டவாறு விளக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“சரவணா கார்டன் ஃபேஸ்–2 வழுதரெட்டி பகுதிக்கு புதியதாக தெரு மின்விளக்கு அமைக்க வேண்டிய மனுவிற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை விவரம் கீழ்காணும் விபரப்படி பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

1. விழுப்புரம் நகராட்சி வார்டு எண்.33, வழுதரெட்டி சரவணா கார்டன் ஃபேஸ்–2 பகுதிக்கு புதிய மின் இணைப்புடன் தெருமின் விளக்கு அமைக்க வேண்டி வரைபடம் தயார் செய்து உதவி மின்பொறியாளர், நகரம் தெற்கு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு விண்ணப்பித்த Application No.2000240611241652, கட்டணம் ரூ.4550/– வங்கி வரைவோலையாக செலுத்தப்பட்டுள்ளது.

2. வார்டு எண்.33, வழுதரெட்டி சரவணா கார்டன் ஃபேஸ்–2, பகுதிக்கு புதிய மின் இணைப்புடன் தெருமின் விளக்குகள் அமைக்க வேண்டி விண்ணப்பத்திற்கு மதிப்பீடு கட்டணம் ரூ.44759/–ஐ வரப்பெற்று கேட்பிற்கு உதவி மின்பொறியாளர், நகரம் தெற்கு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு வங்கி வரைவோலையாக செலுத்தப்பட்டுள்ளது.

3. மேற்படி வார்டு எண்.33, வழுதரெட்டி சரவணா கார்டன் ஃபேஸ்–2 பகுதிக்கு புதிய தெருமின் இணைப்பு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மூலம் பணி முடிக்கப்பட்டு நகராட்சி மூலம் புதிய தெரு மின்விளக்குகள் அமைத்து பணி முடிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் மனுதாரர் கோரிக்கையின் மீது தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு கோரிக்கை முடிக்கப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.”

6) மனுதாரர் 28.01.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை.

7) எதிர்மனுதாரரான விழுப்புரம் நகராட்சி ஆணையரின் கடித ந.க.எண்.364/2023/எப்1, நாள் 27.01.2026–ல் விழுப்புரம் நகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் SIR தேர்தல் பணிகள் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருவதால் 28.01.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு நகராட்சியின் உதவி பொறியாளர் திரு. கௌதம் என்பவரை அனுப்பி வைப்பதாக தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, விழுப்புரம் நகராட்சி உதவி பொறியாளர் திரு. கௌதம் என்பவர் 28.01.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

“மனுதாரரின் புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள விழுப்புரம் நகராட்சி வார்டு எண்.33, வழுதரெட்டி சரவணா கார்டன் ஃபேஸ்–2 மற்றும் சண்முகா கார்டன் நகர் ஆகிய பகுதிகள் அனுமதியற்ற மனைப் பிரிவாகும். மேற்படி மனைப் பிரிவில் உள்ள 76 மனைகளில் 27 மட்டுமே வரன்முறை செய்யப்பட்டுள்ளது. தற்போது மேற்படி மனைப் பிரிவில் 3 வீடுகள் மட்டுமே கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளதால் மேற்படி வீடுகளுக்கு மட்டும் பயன்பெறும் வகையில் 13 தெரு விளக்குகள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் மூலம் அமைக்கப்பட்டு மனுதாரரின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது என்ற விவரம் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.”

8) மனுதாரரின் 27.01.2026 நாளிட்ட மின்னஞ்சல் கடிதத்தில் தனது உடல் நலம் காரணமாக மருத்துவமனை செல்ல வேண்டியுள்ளதால் 28.01.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணையை பிப்ரவரி மாதம் முதல் வாரத்திற்கு மாற்றித்தருமாறும், விசாரணையில் தனது மகன் திரு. மணிவாசகன் என்பரை ஆஜராக அனுமதிக்குமாறும் மனுதாரர் கேட்டுக்கொண்டுள்ளார்.

9) மனுதாரரின் கோரிக்கையினை ஏற்று மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான விழுப்புரம் நகராட்சி ஆணையர் ஆகியோர் 13.02.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு 02.02.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

10) 13.02.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரரோ அல்லது மனுதாரரின் 27.01.2026 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்தவாறு மனுதாரரின் மகனோ ஆஜராகவில்லை. மனுதாரர் தனது 13.02.2026 நாளிட்ட மின்னஞ்சல் கடிதத்தில் தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் 13.02.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகவில்லை என்றும், எனவே, ஆவணங்களின் அடிப்படையில் தீர்ப்பு வழங்குமாறும் தெரிவித்துள்ளார்.

11) எதிர்மனுதாரரான விழுப்புரம் நகராட்சி ஆணையரின் கடித ந.க.எண்.364/2023/எப்1, நாள் 12.02.2026–ல் விழுப்புரம் நகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் SIR பணிகள் தொடாந்து நடைபெற்று வருவதால், 13.02.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு நகராட்சியின் உதவி பொறியாளர் திரு. கௌதம் என்பவரை அனுப்பி வைப்பதாக தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து விழுப்புரம் நகராட்சி உதவி பொறியாளர் திரு. M.R கௌதம் என்பவர் 13.02.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"மனுதாரரின் புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள விழுப்புரம் நகராட்சி வார்டு எண்.33, வழுதரெட்டி சரவணா கார்டன் ஃபேஸ்–2 மற்றும் சண்முகா கார்டன் நகர் ஆகிய பகுதிகள் புதிய மின் இணைப்புகள் அமைக்கும் பணி நடைபெற்று முடிவுற்றுள்ளது.

மனுதாரரான திருமதி. மல்லிகா அவர்களின் வீடு உள்ள தெரு வரைக்கும் மின்விளக்கு அமைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட விவரங்களை இம்முறைமன்ற நடுவத்தில் பணிந்து சமர்ப்பிக்கிறேன்."

12. மனுதாரரின் புகார் மனு மற்றும் கடிதங்கள், எதிர்மனுதாரரான விழுப்புரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி உதவிப் பொறியாளரின் வாக்குமூலங்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தினால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

மனுதாரர் விழுப்புரம் நகராட்சிக்கு உட்பட்ட வழுதரெட்டியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சரவணா கார்டன், சண்முகா கார்டன், (Phase II)–ல் வசித்து வருகிறார் என்பதும், எல்லீஸ் சத்திரம் சாலை வழியாக (ES College) பாளையம், திருப்பச்சாவடி மேடு, கொண்டங்கி, கோவிந்தபுரம், கப்பூர், மரகதபுரம், ஒருகோடி, ஏனாதிமங்கலம் போன்ற பல ஊர்களுக்குச் செல்லும் மிக முக்கியமான சாலை என்பதால் தெருவிளக்குகள் அமைக்க கோரப்பட்டுள்ளது என்பதும், தெருவிளக்குகள் இல்லாததால் குண்டர்கள், கொள்ளையர்கள் மற்றும் பிற தீய செயல்களில் ஈடுபடுபவர்களால் பெண்கள் குழந்தைகள் மற்றும் முதியவர்கள் அவசர தேவைக்கு வெளியில் செல்ல அஞ்சுகின்றனர் என்பதும் மனுதாரரின் புகார் மனுவிலிருந்து அறியமுடிகிறது.

மனுதாரரின் புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள வழுதரெட்டி சரவணா கார்டன் ஃபேஸ்–2 மற்றும் சண்முகா கார்டன் நகர் ஆகியவை அனுமதியற்ற மனைப் பிரிவில் உள்ள 76 மனைகளில் 27 மட்டும் வரன்முறை செய்யப்பட்டு தற்போது 3 வீடுகள் மட்டும் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது என்பதும், மேற்படி வீடுகள் பயன்பெறும் வகையில் வழுதரெட்டி சரவணா கார்டன் ஃபேஸ்–2 பகுதிக்கு புதிய மின் இணைப்புடன் தெருமின் விளக்கு அமைத்திட வரைபடம் தயார் செய்து, தெருமின் விளக்குகள் அமைக்க வேண்டி மதிப்பீடு கட்டணம் செலுத்தப்பட்டு 13 தெரு விளக்குகள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மூலம் பொருத்தப்பட்டு மனுதாரரின் வீடு வரை மின்விளக்குகள் அமைக்கப்பட்டு மனுதாரரின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதும் விழுப்புரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி உதவி பொறியாளரின் வாக்குமூலங்களிலிருந்து அறியமுடிகிறது.

இந்நேர்வில், மனுதாரருக்கு இருமுறை வாய்ப்பளித்தும் விசாரணைக்கு ஆஜராகாமல், ஆவணங்களின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கிட கேட்டுக்கொண்டுள்ளதைத் தொடர்ந்து, போதுமான மின்விளக்குகள் அமைக்கப்பட்டு மனுதாரரின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு உள்ளதாக விழுப்புரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் விழுப்புரம் நகராட்சி உதவி பொறியாளரின் வாக்குமூலங்களில்

தெரிவித்துள்ளதை ஏற்று, மனுதாரரின் முறையீட்டு மனுமீதான நடவடிக்கையை இத்துடன் முடித்துவைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 11–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திருமதி. K. மல்லிகா,
க/பெ. M. கிருஷ்ணமூர்த்தி,
பிளாட் எண்.97, சண்முகா கார்டன் பேஸ் – 2,
வழுதரெட்டி, விழுப்புரம்– 605 401,
விழுப்புரம் மாவட்டம்.

2) நகராட்சி ஆணையர்,
விழுப்புரம் நகராட்சி,
விழுப்புரம் மாவட்டம்..

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

13/3/26
செயலாளர்.
6/7
13/3/26